செ.வெ.எண்: 53/ஜூன் நாள் : 21.06.2016

## இராமநாதபுரம் மாவட்டம்

## அம்மா அரோக்கிய திட்டத்தைப் பயன்படுத்தி முழு உடல் பரிசோதனை செய்து கொள்ளலாம்

## மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்

30 வயதிற்கு மேற்பட்ட அனைவருக்கும் நோய் வருமுன் அறிந்து முழு சிகிச்சையளிக்கும் வகையில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் அம்மா ஆரோக்கிய திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இதன் கீழ் 30 வயதிற்கு மேற்பட்ட அனைத்து ஆண், பெண் இருபாலருக்கும் முழு உடற்பரிசோதனைகள் இலவசமாக செய்யப்படுகின்றது.

நோயினை முன்னரே கண்டறிவது, அவர்களுக்கு ஆரம்ப சுகாதார நிலையத்திலேயே சிகிச்சையளிப்பது, தேவைப்படின் மேல் சிகிச்சைக்கு அரசு மருத்துவமனைக்கு பரிந்துரை செய்வது மற்றும் முதலமைச்சரின் விரிவான காப்பீட்டு திட்டத்தின் கீழ் தேவைப்படும் நபர்களுக்கு மேல் சிகிச்சை மேற்கொள்வது இதன் நோக்கமாகும்.

இம் முகாமில் முழு உடல்பரிசோதனை, உயரம் எடை, இரத்த அழுத்தம், இரத்தம் மற்றும் சிறுநீர் பரிசோதனைகள், புற்றுநோய் பரிசோதனைகள், கண் பரிசோதனை, தோல் பரிசோதனை, சளிப்பரிசோதனை, தேவைப்படுவோருக்கு இஜிசி, ஸ்கேன் மற்றும் எகஸ்ரே எடுக்கப்படும்

இராமநாதபுரம் மாவட்டத்தில் ஒவ்வொரு வியாழன் மற்றும் வெள்ளி கிழமைகளில் தேவிபட்டிணம், ஆர்.எஸ்.மங்கலம், தொண்டி, உச்சிப்புளி, மண்டபம், பெரியபட்டிணம், போகளுர், நயினார்கோவில், பார்த்திபனுார், சாயல்குடி, பேரையூர், மற்றும் கீழத்துாவல் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களில் நடத்தப்பட்டு வருகின்றது.

பொதுமக்கள் அம்மா ஆரோக்கிய திட்டத்தை பயண்படுத்தி முழு உடல்பரிசோதனை மேற்கொண்டு ஆரோக்கியம் மேம்படுத்த கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேற்கண்ட தகவலை இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**